[18th September 1961

தான் ஊர்வலமாகச் சென்று அதிகாரியைப் பார்ப்பது என்ற நோக்கத்தோடு போனார்கள். அப்படிப் போனது தவறா? அதற்காக வேண்டி 'அரெஸ்ட்' செய்தது முறையா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஊர்வலமாகப் போனார்கள் என்பதைக் கனம் அங்கத்தினர் அவர்கள் ஒத்துக் கொள்வதுபற்றி மகிழ்ச்சி. அனுமதி இல்லாமல் ஊர்வலம் போனதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

Famine Relief Work

* 1580 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state the steps taken for the formation of Pond Works in Erode taluk to give relief to the drought affected people of that area?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government have not sanctioned pond works in Erode Taluk as a relief measure as the conditions in the taluk did not warrant any such step.

SRI N. K. PALANISAMI : May I know whether there is any proposal to entrust the work of formation of ponds to the District Collectors instead of the Food Production Department, and if so, may I know the reasons for the same?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have no idea about it just now. So, I would like to have notice.

SRI R. KRISHNASAMI NAIDU : இந்தக் கேள்வியில் "பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக" என்று தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், "பஞ்ச நிவாரணம்" என்று தலைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பட்ஜெட்டில்கூட, "பஞ்ச நிவாரணம்" என்ற தலைப்பு கொடுக்கப்பட்டு பணம் ஒதுக்கப்படுகிறது. பஞ்சங்கள் எந்தக் காலத்திலோ ஏற்பட்டன. அப்பொழுது இந்தத் தலைப்பு கொடுக்கப்பட்டது பொருத்தமாக இருந்திருக்கலாம். ஆனால், இப்பொழுது அவசியமில்லை. ஆகையால், இனிமேல் அந்த முறையைக் கையாளாமல் மாற்றுவதற்கு அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா?

DEPUTY SPEAKER : How does it arise from the main question?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதற்குத் தனியாக கேள்வி போடலாம்.

Public Works Department Shed (Aduthurai)

* 1581 Q.—T. R. RAMAMIRTHA THONDAMAN : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லா ஆடுதுறையில் ஷெட்டை (P.W.D). அகற்ற வேண்டுமென்று கோரிக்கைகள் வந்தனவா?

18th September 1961]

(இ) அப்படியானுல், அது எப்போது அகற்றப்படும்?

(உ) அங்கே ஒரு பொது பஸ் ஸ்டாண்டும், பார்க்கும் ஏற்படுத்த உத்தேசமுண்டா?

(எ) அப்படியானுல், எப்போது?

THE HON. SRI P. KAKKAN : (அ) Yes sir.

(இ) Under consideration.

(உ) The Government have no such proposal under consideration.

(எ) Does not arise.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : ஆடுதுறையில் நான்கு ரோடுகள் சந்திக்கும் நடு மையத்தில், போக்குவரத்துக்கு இடையூருக பழைய காலத்து பி.டபிள்யூ.டி. ஷெட் இருக்கிறது. அந்த ஷெட்டை அகற்றி அங்கு ஒரு பஸ் ஸ்டாண்டு ஏற்படுத்த வேண்டுமென்று அமைச்சர்களுக்கு அங்கு வரும்போதெல்லாம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கனம் ரெவினியூ அமைச்சர் அவர்களும் நேரில் பார்வையிட்டிருக்கிருர்கள். இது விஷயமாகப் பஞ்சாயத்து போர்டும், பஞ்சாயத்து யூனியனும் பல தீர்மானங்கள் போட்டு சர்க்காருக்கு அனுப்பியிருக்கின்றன. அங்குள்ள மக்களும் பல மனுக்கள் கொடுத்திருக்கிருர்கள். அங்கு அதிகப்படியான பஸ் போக்குவரத்து ஏற்பட்டிருப்பதுடன், அந்த ஷெட் நடு மையத்தில், ஜனங்கள் நடமாடக்கூடிய இடத்தில் இருப்பதால், ஜனங்களுக்கு கஷ்டமாக இருக்கிறது. மேலும் அந்த ஷெட் அவசியமில்லாமல் இருப்பதால், சிக்கிரமாக அந்த ஷெட்டை அப்புறப்படுத்திவிட்டு, அங்கு ஒரு பஸ் நிலேயம் ஏற்படுத்தும்படி சர்க்கார் உத்தரவிடுமா?

THE HON. SRI P. KAKKAN : இந்த ஷெட்டை வேருெரு இடத்திற்கு அகற்றுவதுபற்றி பரிசிலனே செய்யப்பட்டது. அதற்காக ஒரு இடம் பார்த்தார்கள். பார்க்கப்பட்ட இடம் ரொம்பப் பள்ளமாகவும், மயானக் கரையாகவும், தண்ணீர் தேங்கக்கூடியதாகவும் இருந்ததால், அந்த ஷெட்டைக் கட்டுவது நல்லதல்ல என்று இப்பொழுது பி.டபிள்யூ.டி. பிரதம இன்ஜினீயர் தகவல் கொடுத்திருக்கிருர். அப்படி பஸ் ஸ்டாண்டு கட்டலாம் என்ருலும், அரை எக்கர்கூட இல்லே. பஸ் ஸ்டாண்டுக்கும் அது உதவாது என்று தகவல் கிடைத்திருப்பதால், இப்பொழுது அதைக் கவனிப்பதற்கில்லே.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : பி.டபிள்யூ.டி. ஷெட் டெலிபோன் ஷெட்டாகத்தான் உபயோகப்பட்டு வருகிறது. டெலிபோன் ஷெட், ரயில்வே ஸ்டேஷனுக்குச் சமிபத்தில் உள்ள புறம்போக்கு நிலத்தில் கட்டப்படலாம். இப்பொழுதிருக்கும் இடத்தில் கூச்சலாக இருப்பதால், டெலிபோன் பேச முடியாது. கனம் அமைச்சர் அவர்கள் அரை எக்கர் தான் இருப்பதாகக்

குறிப்பிட்டார்கள். பக்கத்தில் இருந்த குளம் தூர்ந்துபோய் இருக்கிறது. அது முக்கால் ஏக்கர் பரப்பு இருக்கும். அதனால்தான் அங்கு பஸ் நிலையம் அமைக்கவேண்டுமென்ற கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

THE HON. SRI P. KAKKAN : சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுபற்றியெல்லாம் பரிசீலனை செய்துதான் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள். இப்பொழுது அந்த முடிவை ஏற்றுக் கொள்வது நல்லது என்று கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Land Tax.

* 1582 *Q.*—SRI R. SRINIVASA IYER (on behalf of SRI M. D. THIAGARAJAN) : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ள சர்க்கார் நஞ்சை நிலங்களுக்கும் இனாம் புஞ்சையில் நஞ்சை நிலங்களுக்கும் தீர்வையில் உள்ள வித்தியாசத்தைப் போக்க உத்தேசமுண்டா?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir.

11-30 a.m. SRI R. SRINIVASA IYER : இனாம் புஞ்சை நிலங்களில் சர்க்கார் தண்ணீரைப் பாய்ச்சி, நஞ்சை சாகுபடி செய்தால், புஞ்சைத் தீர்வையும், தண்ணீர்த் தீர்வையும் அதற்குள்ள செஸ்ஸும் சேர்த்துச் செலுத்துவதென்றால், அது பக்கத்திலே இருக்கும் ரயத்துவாரி நஞ்சை நிலத்திற்கான தீர்வையைக் காட்டிலும் கிட்டத்தட்ட இரண்டு பங்கு ஆகிறது. ஸ்ரீ எஸ். ஒய். கிருஷ்ணசாமி அவர்கள் காவிரி-மேட்டூர் ப்ராஜெக்ட் பாசனப் பிரதேசம் சம்பந்தமாக சமர்ப்பித்த ரிப்போர்ட்டில், தண்ணீர்த் தீர்வையையும் நிரந்தரமாக ஜலம் பாயக்கூடிய புஞ்சைத் தீர்வையையும் ஒன்றாக 'கன்ஸாலிடேட்' பண்ணவேண்டுமென்று சொல்லியிருக்கிறார். அப்படிக் கன்ஸாலிடேட் பண்ணும் நோக்கம் சர்க்காருக்கு உண்டா? பட்டுக்கோட்டை, அறந்தாங்கி தாலுகாக்களைப் பொறுத்தமட்டிலும் புஞ்சையில் தண்ணீர் ஐந்து வருஷங்களாகப் பாய்ந்தாலும், அதை நஞ்சையாக மாற்றக் கூடாது என்று அரசாங்கம் புதிதாக உத்திரவு போட்டிருக்கிறது. ஆனால், தஞ்சை ஜில்லாவின் இதர தாலுகாக்களைப் பொறுத்த வரையில் வேறு விதமாக இருக்கிறது. இந்த வித்தியாசத்தைப் போக்க சர்க்காருக்கு உத்தேசம் இருக்கிறதா?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்பொழுது கையாளுகிற முறை தற்காலிகமானது. அடுத்திருக்கும் ரயத்துவாரி நிலங்களுக்கு எப்படித் தீர்வை செலுத்துகிறார்களோ அம்மாதிரியே இதற்கும் இருக்கிறது. ஆனால், இனாம் பிராந்தியத்தில் 'ஸெட்டில்மென்ட்' ஆனபிறகு ஒரு ஒழுங்குக்கு வந்துவிடும். அதுவரையில், தற்காலிகமாக இம்மாதிரி முறை இருக்கும்.